# சுபீட்சம்

SUPEEDSAM
EVERYTHING FOR PEOPLE
அனைத்து விடயங்களும் மக்களுக்காகவே

நிகழ்நிலை பத்திரிகை: அனைத்து விடயங்களும் மக்களுக்காகவே

சர்விரி வருடம் புரட்டாதி மாதம் 13ஆம் நாள் செவ்வாய்க்கிழமை (29.09.2020)

Email : supeedsam@gmail.com | www.supeedsam.com


## முடங்கியது வட - கிழக்கு பிரதேசம்



[ந.குகதர்சன், பாறுக் ஷிஹான், ரீ.எல்.ஜவ்பர்கான், வி.சுகிர்தகுமார், வாஸ் கூஞ்ஞ]

ஒன்றிணைந்த தமிழ் கட்சிகள் விடுத்தவேண்டுகோளின் அடிப்படையில் வடகிழக்கில் நேற்று பூரண ஹர்த்தால் அனுஸ்டிக்கப்பட்டது.

விடுதலைப் போராட்டத்தில் இறந்தவர்களை நினைவுகூரும் உரிமையை அரசாங்கம் தடுத்தமைக்கு எதிராக இந்த ஹர்த்தால்

02 >>>

## ஹர்த்தாலுக்கு எதிர்ப்பு தெரிவித்து வாழைச்சேனையில் போராட்டம்



[ந.குகதர்சன்]

ஒன்றிணைந்த தமிழ் கட்சிகளின் ஏற்பாட்டில் வடக்கு கிழக்கு தழுவிய ரீதியில் பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்குமாறு கோரியதற்கு எதிர்ப்பு தெரிவித்து கோறளைப்பற்று பிரதேச மக்களால்

02 >>>

## முஸ்லிம்கள் விடயத்தில் சுமந்திரன் இரட்டை முகத்தை கொண்டவராக இருக்கிறார்

### – ஹரீஸ் எம்.பி தெரிவிப்பு



[எஸ்.அஷ்ரப்கான்]

முஸ்லிங்கள் விடயத்தில் சுமந்திரன் இரட்டை முகத்தை கொண்டவராக இருக்கிறார் என பாராளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி எச்.எம்.எம் ஹரீஸ் தெரிவித்தார்.

சாய்ந்தமருது சஹிரியன் விளையாட்டுக் கழகத்தின் ஏற்பாட்டில் கழகத்தின் முகாமையாளர் றியாத் ஏ.மஜீத், பிரதித் தலைவர் ஷரீப் ஹக்கீம் ஆகியோர் கௌரவ கலாநிதி பட்டம் பெற்றதை பாராட்டும் நிகழ்வு நேற்று முன்தினம் (27) சாய்ந்தமருது "சீ பிறீஸ்" மண்டபத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக கலந்து கொண்டு உரையாற்றிய அவர் மேலும் அங்கு பேசியபோது, முஸ்லிம் சமூகத்தினை சில

03 >>>

## 55 பவுண் நகைகளுடன் 12 வீடுகளில் கொள்ளையிட்ட மூவர் கைது

[ரீ.எல். ஜவ்பர்கான்]

12 வீடுகளை உடைத்து 55 பவுண் தங்க நகைகளைக் கொள்ளையிட்ட மூன்று சந்தேக நபர்களை காத்தான்குடி பொலிசார் கைது செய்துள்ளதாக பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி துமிந்த நயணசிறி தெரிவித்தார்.

காத்தான்குடி பொலிஸ் பிரிவிற்குட்பட்ட ஆரையம்பதி நாவற்குடா ஆகிய இடங்களிலேயே இவ்வீடுகள் உடைக்கப்பட்டு கொள்ளையிடப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

மட்டக்களப்பு

03 >>>

## உணர்வு அரசியலுக்கு இனி இடமில்லை என்றவர்களின் முகத்தில் தமிழ் மக்கள்

### சேறு பூசியுள்ளனர் – இரா.சாணக்கியன்!



உணர்வு அரசியலுக்கும், தமிழ்த் தேசியத்திற்கு இனி வடக்கு, கிழக்கில் இடமில்லை என்று கூறியவர்களின் முகத்தில் தமிழ் மக்கள் சேறு பூசியுள்ளனர் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் தெரிவித்தார்.

தமிழர் தாயகப்பகுதிகளில் நேற்று ஹர்த்தால் அனுஸ்டிக்கப்பட்டிருந்த நிலையில்,

தமிழ் மக்களுக்கு நன்றி தெரிவித்து வெளியிட்டுள்ள விசேட காணொளி ஒன்றிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இதன்போது அவர் வெளியிட்டுள்ள காணொளியில், "முதலாவதாக வடக்கு, கிழக்கு வாழ் மக்கள் அனைவருக்கும்

03 >>>

## 20 ஆவது திருத்தம் குறித்து ஆராய ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் விசேட குழு

20
SRI LANKA FREEDOM PARTY

அரசியலமைப்பில் முன்மொழியப்பட்ட 20 ஆவது திருத்தம் குறித்து ஆய்வு செய்து கட்சிக்கு பரிந்துரைகளை வழங்க சிறிலங்கா சுதந்திரக் கட்சியால் நியமிக்கப்பட்ட குழுவின் உறுப்பினர்கள்

03 >>>

## வாக்குறுதியை மீறி அரச அதிகாரிகள் செயல்பட்டதைக் கண்டித்து எதிர்ப்பு போராட்டம்



[வாஸ் கூஞ்ஞ]

கடந்தகால யுத்தத்தின்போது பாதிப்புக்குள்ளாகி இடம்பெயர்ந்து வாழ்ந்த மக்களை மீள் குடியேற்றிய நிலையில் அவர்களுக்கு விவசாய நிலம் தருவதாக வாக்களித்திருந்தபோதும் இவர்களுக்கு வழங்கப்பட இருந்ததாக கூறப்படும் விவசாய நிலைத்தை ஒரு தனியாருக்கு அரச அதிகாரிகள் வழங்கப்பட்டதை கண்டித்து மன்னார் சன்னார் ஈச்சலவக்கை மக்கள் கவனயீர்ப்பு

02 >>>

## நீதிமன்றம் சென்ற எம்.டீ நியூ டைமண்ட் கேப்டன் விவகாரம்



கொழும்பு தலைமை நீதவான் மொஹமட் மிஹார் குடிவரவு மற்றும் குடிவரவு கட்டுப்பாட்டாளருக்கு எம்.டி நியூ டயமெண்டின் கேப்டன் தொடர்பாக சில உத்தரவுகளை பிறப்பித்துள்ளார்.

02 >>>

## சுனாமியில் காணாமல் போன மகனை 16 வருடங்களுக்கு பின்னர் மாறுவேடத்தில் சென்று கண்டுபிடித்த தாய்



[பாறுக் ஷிஹான், நூருல் ஹுதா உமர் ]

16 வருடங்களாக பல்வேறு சிரமங்களுக்கு மத்தியில் மாறுவேடங்களுடன் சென்று எனது மகனை மீட்டிருக்கின்றேன். இன்று எனது மகன் கிடைத்தமைக்கு எல்லாம் வல்ல அல்லாஹூ நன்றி தெரிவிக்கின்றேன் என சுனாமியில் காணாமல் போன மகனை கண்டுபிடித்த தாயான அபுசாலி சித்தி ஹமாலியா என்பவர் தெரிவித்தார்.

அம்பாறை மாவட்டம் சம்மாந்துறை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட மாளிகைக்காடு

03 >>>

## முஸ்லிம்கள்...

(முன்பக்க தொடர்ச்சி)

அரசியல்வாதிகள் தெற்கிலுள்ள பெரும்பான்மை மக்களோடு மோதவிடுகின்ற ஒரு கருவியாக பயன்படுத்துகின்றார்கள். இவ்வாறு பெரும்பான்மை மக்களோடு மோதவிடுவதற்கான ஒரு கருவியாக முஸ்லிம் சமூகத்தினை மாட்டிவிடக்கூடாது.

கிழக்கு மாகாண முஸ்லிம் சமூகம் பாக்குவெட்டியில் அகப்பட்ட பாக்கு போல தேசிய ரீதியான அரசியலில் முகம் கொடுக்கவேண்டி உள்ளது. அதேநேரம் எமது பிராந்திய முஸ்லிம் சமூகத்தின் அரசியல் உரிமையை எங்களுடைய அதிகாரமையத்தினை தக்கவைக்கவேண்டிய நிலையில் நாங்கள் இருந்து கொண்டு இருக்கின்றோம் அதற்கான வழிவகைகளை எங்களது அரசியல் தலைமைகள் செய்யும் என்று நீங்கள் எதிர்பார்க்கின்றீர்கள்.

அதேநேரம் இன்று சம்மாந்துறையில் மறைந்த தலைவரின் நினைவேந்தல் நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ சுமந்திரன் பேசும்போது முஸ்லிம் சமூகம் இந்த நாட்டில் சுயநிர்ணய போராட்டத்தை நடத்த வேண்டும் என்று அறைகூவல் விட்டு இருக்கின்றார். அதே சுமந்திரன் முஸ்லிம் சமூகத்தின் முகவெற்றிலையாக இருக்கின்ற கல்முனை நகரினை முஸ்லிம்களுக்கு விட்டுக்கொடுக்க முடியாது என்று கடந்த வருடம் தெளிவாக குறிப்பிட்டு இருந்தார்.இவ்வாறு அவர் இரட்டை முகத்தினை கொண்டு செயற்படுகின்ற சூழ்நிலையில் இன்னும் இன்னும் தெற்கில் உள்ள பெரும்பான்மையின மக்களோடு மோதவிடுவதற்கான ஒரு கருவியாக முஸ்லிம் சமூகத்தை மாட்டிவிடக்கூடாது என்பதில் நாங்கள் மிகவும் கவனமாக இருக்க வேண்டிய காலமாகும்.

ஏனென்றால் தமிழ் சமூகத்தினுடைய போராட்டத்திற்கு வலிமை சேர்க்கின்ற சக்தியாக பெரும் வல்லரசு நாடான இந்தியா இருக்கின்றது. அண்மையில் இந்திய பிரதமர் மோடியினுடைய உரை கூட தமிழ் தலைமைகளுடைய 13வது திருத்தச் சட்டம் தொடர்பாக பேசி இருக்கின்றார் ஆனால் முஸ்லிம் சமூகத்தின் ஜனாஸா எரிக்கப்பட்ட விடயத்தில் கூட எந்தவொரு வடகிழக்கில் உள்ள தலைமைகளோ, வல்லரசுகளோ! குரல் கொடுக்கவில்லை என்பதன் மூலம் நாங்கள் புரிந்து கொள்ளவேண்டும்.

எமது சமூகத்தை மிகவும் நுட்பமாக அடுத்த கட்டத்திற்கு கொண்டு செல்லவேண்டிய பொறுப்பு எமது சமூகத்தின் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு மட்டும்மன்றி ஒவ்வொரு சமூக ஆர்வலர்களுக்கும் உண்டு என குறிப்பிட்டார்.

இந்நிகழ்வில் சம்மாந்துறை நீதவான் நீதிமன்ற பதில் நீதிபதியும் மௌன்றோ அமைப்பின் தலைவருமான சிரேஷ்ட சட்டத்தரணி ஏ.எம். நசீல், வாழைச்சேனை நீதவான் நீதிமன்ற பதில் நீதிபதி ஹபீப் றிபான், கல்முனை ஸாஹிறா கல்லூரி அதிபர் எம்.ஐ.ஜபீர், கல்முனை மாநகர சபை உறுப்பினர்களான சட்டத்தரணி ஏ.எம்.ரோசன் அக்தர், எம் எஸ்.எம்.சத்தார், எம்.நிசார் (ஜே.பி), காரைதீவு பிரதேச சபை உறுப்பினர்களான ஏ.ஆர்.எம்.பஸ்மீர், எம்.எச். எம்.இஸ்மாயில், எம்.றனிஸ், சாய்ந்தமருது பிரதேச செயலக நிர்வாக உத்தியோகத்தர் ஏ.சி.எம். பழில், பிரதம இவிகிதர் எம்.எம்.றசீட், கல்முனை பிரதேச செயலக சமுர்த்தி தலைமைப்பீட முகாமையாளர் ஏ.ஆர்.எம்.சாலிஹ், சாய்ந்தமருது ஸஹிரியன் விளையாட்டுக் கழகத்தின் தவிசாளர் நௌபர் ஏ.பாவா, பொருளாளர் எம்.நாசர், தெரிவுக்குழு தவிசாளர் எம்.எச்.ஏ.காலிதீன் உள்ளிட்ட கல்வியாளர்கள், சமூக அமைப்புகளின் தலைவர்கள், சாய்ந்தமருது விளையாட்டு கழக சம்மேளன பிரதிநிதிகள என பலரும் கலந்து கொண்டனர்.

## ஹர்த்தாலுக்கு...

(முன்பக்க தொடர்ச்சி)

திங்கட்கிழமை வாழைச்சேனை பொலிஸ் நிலைய சந்தியில் போராட்டம் இடம்பெற்றது.

இதன்போது வாழ விடு வாழ விடு நிம்மதியாக வாழ விடு, குழப்பாதே குழப்பாதே நாட்டை குழப்பாதே, அரசியல் சுயநலத்திற்கு தமிழ் மக்கள் பகடைக்காய்களா?, மேட்டுக்குடி அரசியல்வாதிகளே எம் மக்களை நிம்மதியாக வாழ விடுங்கள், நாம் ஹர்த்தாளை எதிர்க்கின்றோம், நாம் ஒரே நாடு ஒரே தேசம் என்று ஒன்றுபட்டு வாழ்வோம், தேர்தலில் மக்கள் கற்பித்த பாடத்தினை மறந்து விட்டீர்களாக என்ற வாசகங்கள் அடங்கிய பதாதைகளுடன் மக்கள் கலந்து கொண்டனர்.

சமகால அரசாங்கத்தின் செயற்பாடுகளுக்கு எதிர்ப்பு தெரிவித்தும், தமிழர்களின் உரிமை மறுப்பு மற்றும் நினைவேந்தல்களுக்கான தடை ஆகியவற்றை கண்டித்து தமிழ் கட்சிகளினால் இன்று திங்கட்கிழமை பூரண ஹர்த்தாலை அனுஷ்டிக்குமாறு அழைப்பு விடுக்கப்பட்ட நிலையில் மட்டக்களப்பு மாவட்டத்தின் கோறளைப்பற்று பிரதேச மக்களால் எதிர்ப்பு தெரிவித்து போராட்டம் நடைபெற்றது.

அத்தோடு பூரண ஹர்த்தாலை அனுஷ்டிக்குமாறு அழைப்பு விடுத்த பத்து தமிழ் கட்சிகளுக்கு எதிர்ப்பு தெரிவித்தும், தற்போது ஆட்சி அமைக்கும் அரசாங்கத்திற்கு ஆதரவு வழங்கியும் தாம் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளதாக ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்ட மக்கள் தெரிவித்தனர்.

தமிழ் அரசியல்வாதிகள் தங்களுடைய அரசியல் இலாபங்களுக்காகவே இந்த ஹர்த்தாலை அனுஷ்டிக்குமாறு கோரியுள்ளனர். ஆனால் மக்களின் தேவைகள் அதிகம் உள்ளது. இதற்கு முகம் கொடுக்காமல் மக்கள் மத்தியில் நிம்மதியினை குழப்புவதற்கு நடவடிக்கை மேற்கொள்கின்றனர்.

எனவே நாங்கள் அன்றாட தொழில் செய்து வரும் நிலையில் இவ்வாறு ஹர்த்தாலை போட்டு எங்களின் வயிற்றில் அடிக்காதீர்கள். இது தமிழ் அரசியல்வாதிகளின் இலாபத்திற்காக செய்வதால் எங்கள் இளைஞர்கள் இதில் திசை திருப்புவதற்கு வழிக்குக்கின்றது. இந்த அரசாங்கத்தின் மூலம் தாம் நிம்மதியாக வாழ்வதாகவும், எங்களுக்கு இந்த அரசாங்கம் பூரண ஆதரவாக உள்ளதாகவும் ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்ட மக்கள் தெரிவித்தனர்.

குறித்த பூரண ஹர்த்தால் எதிர்ப்பு போராட்டத்தில் வாழைச்சேனை பிரதேச சபை தமிழ்மக்கள் விடுதலைப்புலிகள் உறுப்பினர் எஸ். தர்மலிங்கம் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

## தமிழ்...

(முன்பக்க தொடர்ச்சி)

போராட்டதை முன்னெடுத்தனர்.

திங்கள் (28) சன்னார் ஈச்சலவக்கை மக்கள் முன்னெடுத்த எதிர்ப்பு போராட்டம் தொடர்பாக தெரிவிக்கப்படுவதாவது

கடந்த யுத்தகாலத்தின்போது பாதிக்கப்பட்ட சன்னார் ஈச்சளவக்கை மக்கள் இடம்பெயர்ந்த நிலையில் 2009 ஆம் ஆண்டு இவர்கள் மீண்டும் இப்பகுதியில் குடியேற்றப்பட்டனர்.

அப்பொழுது இவ் மக்களுக்கு 1/2 ஏக்கர் மேட்டுநிலம் வழங்கியே அப்பகுதியில் குடியமர்த்தப்பட்டனர். அத்துடன் இவர்கள் அப்பகுதியில் விவசாயம் செய்வதற்கு காணி ஒதுக்கமுடியும் என்ற வாக்குறுதியும் வழங்கப்பட்டது.

ஆனால் இம் மக்களுக்கு வாக்குறுதி வழங்கியபடி இதுவரை விவசாய நிலம் வழங்கப்படாமல் அரச அதிகாரிகளினால் இழுத்தடிக்கப்பட்டதாகவும் தற்போது சில அரச அதிகாரிகளின் துணையுடன் மக்களுக்கு வழங்க இருந்த விவசாய காணிகளை தனியார் ஒருவருக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்ததுடன் அத் தனி நபரால் காணி துப்பரவும் செய்யப்பட்ட நிலையினால் இக் கிராம மக்கள் இன்றைய தினம் இவ் எதிர்ப்பு நடவடிக்கயில் ஈடுபட்டனர்.

இவ் போராட்டத்தின்போது இவர்களின் கோரிக்கைகள் அடங்கிய பதாதைகளும் ஏந்தியிருந்தனர். அதில்

“அரச அதிகாரிகளே எமது வாழ்வாதரத்தில் கைவைக்காதே“

“விவசாய நிலம் எமக்கு வேண்டும்“

“அரச காணியை தனியாருக்கு விற்காதே?”

“வடக்கு மாகாண ஆளுநர் அவர்களே எமக்கான தீர்வை பெற்றுத்தாருங்கள்“: என்ற வாசகங்களும் அவற்றில் காணப்பட்டன.

இவ் சம்பவம் அறிந்து அவ்விடத்துக்கு வருகை தந்திருந்த வன்னி பாராளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன் மக்களுடன் கலந்துரையாடியபோது மக்களின் கோரிக்கைகளையும் ஏற்றுக்கொண்டு உடனடியாக சம்மந்தபட்ட அதிகாரிகளின் கவனத்திற்கும் கொண்டுசென்றார். யுத்தத்தில் பாதிக்கபட்டு எந்தவிதமான வாழ்வாதாரமும் இன்றி அல்லல்படும் மக்களுக்கு வழங்கவேண்டிய விவசாய நிலத்தை ஒரு தனியாருக்கு வழங்குவதை எந்தவிதத்திலும் ஏற்றுக்கொள்ள முடியாது எனவும் இக் காணி இக் கிராம மக்களுக்கே பகிர்ந்தளிக்க வேண்டும் அவர்களின் வாழ்வாதாரம் இதிலே தங்கியுள்ளது எனவும் குறிப்பிட்டார்.

அச்சமயம் சம்பவ இடத்திற்கு வருகைதந்த அடம்பன் பொலிசார் இக் காணி பிணக்கு தொடர்பாக போலிஸ் நிலையத்தில் முறைப்பாடு கிடைக்கபெற்றுள்ளதாகவும் தாம் விசாரணைகளை முன்னெடுத்து வருவதாகவும் அதுவரையில் எவரும் இக் காணிக்குள் சென்று துப்பரவு செய்ய முடியாது எனவும் வாக்குறுதி அளித்ததின் பிரகாரம் மக்கள் தமது ஆர்ப்பாட்டத்தை தற்காலிகமாக இடைநிறுத்தினர்.

## எம்.டி...

(முன்பக்க தொடர்ச்சி)

விசாரணைகளுக்கு முழு உதவியை வழங்கவும், வசிக்கும் இடம் மாற்றப்பட்டால் நீதிமன்றத்திற்கு தெரிவிக்கவும் மாஜிஸ்திரேட் கப்பலின் கேப்டனுக்கு உத்தரவிட்டார்.

புகார்தாரருக்காக ஆஜரான துணை சொலிசிட்டர் ஜெனரல் திலீப் பீரிஸ், கப்பலில் கப்பல் வெடித்தபோது கேப்டன் தீயை அணைக்க தவறிவிட்டார் என்று குற்றம் சாட்டினார்.

தீ விபத்து நடந்த நேரத்தில் தீயை அணைக்க கேப்டன் செயல்படவில்லை என்றும், விபத்துக்கு காரணமான அதிகாரிகளுக்கு சிக்னல்களை வழங்கவில்லை என்றும் தகவல்களை மறைத்து வைத்திருப்பதாகவும் விசாரணையில் தெரிய வந்துள்ளதாக துணை சொலிசிட்டர் ஜெனரல் தெரிவித்தார். இது 25, 32 மற்றும் 53 பிரிவுகளின் கீழ் கிரிமினல் குற்றம் என்றும் சுட்டிக்காட்டப்பட்டது.

கேப்டன் மற்றும் மாலுமிகள் விபத்தைத் தடுக்க அடிப்படை நடவடிக்கைகளை பின்பற்றாததால் கப்பலில் சேமிக்கப்பட்ட எரிபொருள் கடலில் கசிந்திருப்பதை மொரட்டுவ பல்கலைக்கழக பேராசிரியர்கள் உட்பட பதினான்கு வல்லுநர்கள் அடங்கிய குழு ஏற்கனவே உறுதிப்படுத்தியதாக துணை சொலிசிட்டர் ஜெனரல் சுட்டிக்காட்டினார். விபத்து நடந்த இடத்திலிருந்து இரண்டு கடல் மைல் பரப்பளவில் இரண்டு மில்லிமீட்டர் தடிமன் கொண்ட எண்ணெய் அடுக்கு கடல் நீரில் பரவியுள்ளது என்றும் அவர் கூறினார்.

சந்தேகநபருக்கு எதிராக உயர்நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்ய சட்டமா அதிபர் விரும்புகிறார் என்றும், இதுபோன்ற வழக்கு பதிவு செய்யப்பட்டால் அவர் மீண்டும் நீதிமன்றத்திற்கு கொண்டு வரப்படுவதை உறுதி செய்வதற்காக அரசாங்க மேற்பார்வையின் கீழ் தடுத்து வைக்கப்பட வேண்டும் என்றும் துணை சொலிசிட்டர் ஜெனரல் நீதிமன்றத்தில் சுட்டிக்காட்டினார்.

அதன்படி, சந்தேக நபரை ரிமாண்ட் செய்யுமாறு துணை சொலிசிட்டர் ஜெனரல் நீதிமன்றத்தை கோரியுள்ளார். சந்தேக நபருக்காக ஆஜரான வழக்கறிஞர் நிபூனா விமலசேகர, வாதி கோரியபடி சந்தேக நபரை ரிமாண்ட் செய்ய மாஜிஸ்திரேட் நீதிமன்றத்திற்கு எந்த அதிகாரமும் இல்லை என்று கூறியுள்ளார்

## முடங்கியது...

(முன்பக்க தொடர்ச்சி)

அனுஸ்டிக்கப்பட்டது.

### மட்டக்களப்பு

மட்டக்களப்பு மாவட்டத்தில் வர்த்தக நிலையங்கள் மூடப்பட்டுள்ளதுடன் பாடசாலைகள் இயங்கிய போதிலும் மாணவர்கள் மிக வரவு குறைந்த நிலையிலேயே காணப்படுகின்றது.

இலங்கை போக்குவரத்து சேவை பஸ்கள் சேவைகள் சேவையில் ஈடுபட்டுள்ள அதேவேளை தூர இடங்களுக்கான சேவைகளில் தனியார் பஸ்கள் ஈடுபட்டன.

அலுவலகங்கள் திறக்கப்பட்டுள்ளபோதிலும் மக்கள் வருகை மிகவும் குறைவான நிலையிலேயே காணப்பட்டது.

குறிப்பாக மட்டக்களப்பு நகர் உட்பட பல பகுதிகளில் பொலிஸார் பாதுகாப்பு கடமைகளில் ஈடுபட்டுள்ளதுடன் விசேட அதிரடிப்படையினர் ரோந்து பணியில் ஈடுபட்டனர்..

பாடசாலைகளில் மற்றும் அலுவலகங்களில் புலனாய்வுத்துறையினர் விசாரணைகளில் ஈடுபட்டதாக தெரியவருகின்றது.இன்றைய தினம் கடமைக்கு சமூகம் தந்தவர்கள் சமூகம் தராதவர்கள் தொடர்பான விபரங்கள் புலனாய்வுத்துறையினரால் சேகரிக்கப்பட்டுள்ளன.

இதேநேரம் நேற்றைய தினம் முஸ்லிம் பிரதேசங்களில் வழமைபோன்று செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

### அம்பாறை

அனைத்து தமிழ் அரசியல் கட்சிகள் வட கிழக்கு மாகாணத்தில் ஹர்த்தாலுக்கு விடுத்த கோரிக்கையினை அம்பாறை மாவட்ட மக்கள் அதனை நிராகரித்து வழமையான செயற்பாட்டில் திங்கட்கிழமை(28) ஈடுபட்டனர்..

அம்பாறை மாவட்டத்தின் கல்முனை, சவளக்கடை, சம்மாந்துறை, மத்தியமுகாம், பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் இன்று உணவகங்கள், புடவைக்கடைகள்,வீதியோர வியாபாரங்கள் போன்றவைகள் வழமை போன்று இயங்கியது.

இம்மாவட்டத்தில் வழமை போன்று அதிகளவிலான பொதுமக்கள் முண்டியடித்துக் கொண்டு பொருட் கொள்வனவில் ஈடுபட்டு வந்ததை அவதானிக்க முடிந்தது. இம்மாவட்டத்தின் பெரிய நீலாவணை, ஒந்தாச்சிமடம், காரைதீவு ,சாய்ந்தமருது, மாளிகைக்காடு, நிந்தவூர்,அட்டப்பளம், சம்மாந்துறை மாவடிப்பள்ளி ,சவளக்கடை, மத்தியமுகாம் ,உள்ளிட்ட முக்கிய இடங்களில் பிரதேசங்களில் மக்களின் நடமாட்டம் அதிகரித்து வழமை போன்று செயற்பாட்டில் ஈடுபட்டனர்.

அத்தோடு பொதுமக்கள் ஒன்றுகூடும் இடங்களுக்குச் சென்று பொலிஸாருடன் இணைந்து கடற்படை இராணுவம் பாதுகாப்பு கடமைகளில் ஈடுபட்டனர்.

அத்துடன் கல்முனை பொது சந்தை உட்பட அதனை சூழ உள்ள பாதையோரங்களில் மரக்கறி வியாபாரம் களைகட்டியது. மேலும் வியாபார நிலையங்கள் ,சுப்பர்மார்க்கெட்டுகள், பாடசாலைகள் , பாமசிகள், வங்கிகள், எரிபொருள் நிலையங்கள் வழமை போன்று திறக்கப்பட்டடு வியாபாரம் இடம்பெற்றது.

எனினும் சில இடங்களில் பொதுமக்களின் வருகை இன்மையால் வியாபார நடவடிக்கைகளும் ஸ்தம்பிதம் அடைந்துள்ளதாக வியாபாரிகள் தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது.

### மன்னார்

இறந்தவர்களை அவர்கள் உறவினர்கள் நினைவு கூறும் உரிமையை இந்த சமகால அரசு தடுத்தமைக்கு எதிராக நேற்று திங்கள் கிழமை (28.09.2020) வடக்கு கிழக்கு பகுதிகளில் பூரண முடக்கு போராட்டத்துக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது.

இதற்கமைய மன்னார் பகுதியிலும் இவ் முடக்கு போராட்டாம் இடம்பெற்றிருந்தது. இவ் பகுதியிலுள்ள பாடசாலைகளில் கனிசமான மாணவர்களின் வருகை குறைந்து காணப்பட்டது.

மன்னார் நகருக்குள் இயங்கி வரும் முக்கிய பாடசாலைகளான மன்னார் புனித சவேரியார் ஆண்கள் தேசிய பாடசாலையில் 1666 மாணவர்களில் 526 மாணவர்கள் மட்டுமே பாடசாலைக்கு சமூகமளித்திருந்தனர். இவ் பாடசாலையில் 96 ஆசிரியர்களில் 73 பேர் மட்டும் வருகை தந்திருந்ததாக இவ் வட்டாரம் தெரிவித்தது.

மன்னார் சித்திவிநாயகர் இந்து கல்லூரியில் 83 ஆசிரியர்களில் 67 பேர் மட்டும் பாடசாலைக்கு சமூகமளித்திருந்தனர். அத்துடன் 1382 மாணவர்களில் 366 பேர் மட்டும் பாடசாலைக்கு வருகை தந்திருந்தனர்.

மன்னார் அல் அஸ்ஹர் மகா வித்தியாலயத்தில் 70 ஆசிரியர்களில் 58 பேர் மட்டும் சமூகமளித்திருந்ததுடன் அவ் பாடசாலையிலுள்ள 650 மாணவர்களில் ஒரு சிலர் பாடசாலை வரை வந்துவிட்டு உடன் திரும்பிச் சென்றதையும் காணக்கூடியதாக இருந்தது. அத்துடன் இவ் பாடசாலையில் மாணவர்கள் இன்றி வெறிச்சோடி காணப்பட்டது.

இவ்வாறு இப் பகுதியிலுள்ள மன்னார் கல்வி வலயப் பகுதியில் 86.7 வீதமான ஆசிரியர்கள் வருகை தந்திருந்தபோதும் மாணவர்கள் வருகை வழமையைவிட வெகுவாக குறைந்து காணப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது. 68.36 வீதமான மாணவர்களே இன்றைய தினம் பாடசாலைக்கு வருகை தந்திருந்ததாக மன்னார் வலய கல்விப் பணிப்பாளர் பிறட்லி தெரிவித்தார்.

மேலும் மன்னார் நகர் மற்றும் பல இடங்களில் தமிழ் முஸ்லீம் வர்த்தக நிலையங்கள் மூடப்பட்டுக் காணப்பட்டன. சந்தைகளும் செறிச்சோடி இருந்தன.

அதேவேளையில் இலங்கை போக்குவரத்து, தனியார் மற்றும் முச்சக்கர வண்டிகளின் சேவைகள் வழமைபோன்று சேவையில் ஈடுபட்டதையும் நோக்கக் கூடியதாக இருந்தது. ஆனால் பயணிகள் தொகை வெகுவாக குறைந்திருந்ததையும் காணக்கூடியதாக இருந்தது.

வீதிகளில் பொலிசாரின் பிரசனம் மிக குறைவாக காணப்பட்டதுடன் இராணுவத்தினரின் பிரசன்னம் அதிகமாகக் காணப்பட்டதும் குறிப்பிடத்தக்கது.

### யாழ்ப்பாணம்

யாழ்ப்பாணத்திலும் முழு கதவடைப்பு போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

யாழ்ப்பாணத்தில் பெரும்பாலான வர்த்தக நிலையங்கள் மூடப்பட்டதுடன். பாடசாலைகளுக்கு மாணவர்கள் செல்லவில்லை என்பதுடன், பாடசாலைகளும் மூடப்பட்டு காணப்பட்டன.

மேலும் பொதுமக்களின் நடமாட்டம் வீதிகளில் குறைவாகவே இருந்ததுடன், அத்தியாவசிய சேவைகள் தவிர்ந்த அனைத்து சேவைகளும் ஸ்தம்பிதமடைந்து காணப்பட்ட அவர் மேலும் குறிப்பிட்டார்.

இதேநேரம் கிளிநொச்சி, வவுனியா, முல்லைத்தீவு, திருகோணமலை போன்ற மாவட்டங்களிலும் முழு கதவடைப்பு போராட்டத்திற்கு மக்கள் ஆதரவளித்துள்ளதாக எமது பிராந்திய செய்தியாளர்கள் தெரிவித்தனர்.

வவுனியாவில் தமிழ், இஸ்லாமிய வர்த்தகர்கள் பூரண ஒத்துழைப்பு வழங்கி வருகின்றனர் என எமது பிராந்திய செய்தியாளர் தெரிவித்தார்.

அரச திணைக்களங்கள் மற்றும் உணவகங்கள் என்பன திறக்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

எனினும் வவுனியா வர்த்தகர் சங்க தலைவர் செயலாளரின் வர்த்தக நிலையம் உட்பட சில தமிழர்களின் கடைகள் திறக்கப்பட்டிருந்ததையும் அவதானின்ன முடிந்தது.

## தமிழ்...

(முன்பக்க தொடர்ச்சி)

பகுதியில் கடந்த 2014.12.26 அன்று இடம்பெற்ற சுனாமி அனர்த்தத்தினால் தனது 5 வயது மகனை இழந்து மனநோயாளியாக தினமும் வாழ்ந்து வந்த நிலையில் தனது அதீத முயற்சியினால் கண்டுபிடித்திருந்த நிலையில் பொதுமக்கள் தற்போது அவரது வீட்டிற்கு சென்று வருகின்றனர்.

இந்நிலையில் ஊடகங்களிற்கு மேற்கண்டவாறு குறிப்பிட்டிருந்தார்.

சுனாமி அனர்த்தம் இடம்பெற்ற வேளை கடமைக்காக வைத்தியசாலையில் சிற்றூழியராக கடமையாற்றி கொண்டிருந்தேன். சம்பவத்தை அறிந்து எனது வீட்டிற்கு சென்று பார்த்தேன். எனது 5 வயதான மகனை காணவில்லை.எங்கும் அழுகுரல் கேட்ட வண்ணம் இருந்தது.நானும் அழுது அழுது எனது மகனை தேடிச் சென்றேன்.கிடைக்கவில்லை.

பின்னர் அம்பாறை வைத்தியசாலையில் காயமடைந்தவர்கள் அனுமதிக்கப்பட்டுள்ளதாக சிலர் கூறியதை அடுத்து அங்கு சென்று நோயாளிகள் வரவு புத்தகத்தில் மகனின் பெயரை தேடி கண்டுபிடித்தேன். ஆனால் ஏமாற்றமே எஞ்சியது.காரணம் மகனை பெற்றோர் என கூறி யாரோ அழைத்து சென்றிருந்தனர்.

அதனை அறிந்து கதறி அழுதேன். வைத்தியசாலையில் இருந்தவர்கள் எனக்கு ஆறுதல் கூறினார்கள்.ஆனாலும் மகன் உயிருடன் தான் இருக்கின்றார் என அறிந்து அவரை தேடும் முயற்சியில் இறங்கினேன்.இதற்கமைய சம்மாந்துறை பொலிஸ் நிலையத்திற்கு சென்று முதற்கட்டமாக முறைப்பாடு ஒன்றினை செய்திருந்தேன்.அடுத்து கல்முனை பகுதியில் உள்ள மனித உரிமை ஆணைக்குழுவிற்கு சென்று தகவல்களை வழங்கி இருந்தேன். ஆனால் எவ்வித நடவடிக்கையும் அங்கு மேற்கொள்ளவில்லை என கூற விரும்புகின்றேன்.

எனது முயற்சியை கைவிடாது அம்பாறை மாவட்டத்தின் புற நகர் பகுதிகளில் மகனை தேடி அலைந்தேன். மிகுந்த நம்பிக்கையுடன் எனது மகனின் சிறுபாராய புகைப்படத்தை தேடி எடுத்து மனநோயாளி போன்று தெரிந்தவர்கள் முதல் தெரியாதவர்கள் வரை கேட்டறிந்து மகன் இருக்கும் பாடசாலையை கண்டறிந்தேன்.

சிங்கள பாடசாலை ஒன்றில் நான் பெயரிட்ட மகன் அதே பெயருடன் அப்பாடசாலையில் கல்வி கற்றுக்கொண்டிருந்தார்.அங்கு அதிபரை அணுகி இரகசியமாக எனது மகனின் விடயத்தை அவரிடம் தெரிவித்தேன்.ஆனால் அவர் என்னை அவமதித்து வெளியேற்றினார்.

எனது மகனை வளர்த்து வந்தவர்களுக்கு விடயம் தெரிய வந்தது.இருந்தாலும் எனது முயற்சினை கைவிடாது பொருள் வியாபாரி மற்றும் ஆடை வியாபாரி போன்று வேடமிட்டு மகன் வளர்க்கப்பட்டு வந்த வீட்டினை அடையாளப்படுத்தி கொண்டேன்.இருந்த போதிலும் மகனை அடைந்து கொள்ள பல்வேறு மட்டங்களை சந்தித்து உதவிகளை கேட்டேன்.ஜனாதிபதி செயலகத்திற்கும் கூட கடிதம் ஒன்றினை எழுதி இருந்தேன்.

இருந்தும் பதில் எதுவும் கிடைக்கவில்லை.உடனடியாக எனது மகனை சென்று பார்வையிட்டு நான் தான் தாய் என்னுடன் வருகின்றாயா என வளர்த்தவரின் வீட்டிற்கு சென்று மகனிடம் கேட்டேன்.உடனே மகன் என்னுடன் வர சம்மதித்தார்.உடனே எனது வீட்டிற்கு கூட்டி வந்தேன். சந்தோசமாக இருக்கின்றேன்.அல்லாஹ் என்னை கைவிடவில்லை.எனது மகனை 16 வருடங்களுக்கு பின்னர் அடைந்து விட்டேன்.இன்று எனது மகன் ஹிந்தி நடிகர் போன்று வளர்ந்திருக்கின்றார் என 5 வயதில் காணாமல் சென்ற றஸீன் முஹம்மட் அக்ரம் றிஸ்கான்(வயது-21) என்பவரின் தாய் கண்ணீருடன் தெரிவித்தார்.

இவ்வாறு கூறி முடிந்த பின்னர் தனது மகனை வளர்த்தவர்கள் எப்போது எந்த நேரமும் மகனை சந்தித்து பார்ப்பதற்கு வருகை தந்தாலும் நான் ஆட்சேபனை செய்ய போவதில்லை என மேலும் குறிப்பிட்டார்.

## 55 பவுன்...

(முன்பக்க தொடர்ச்சி)

மாவட்ட பொலிஸ் அத்தியட்சகர் எல.ஆர்.குமாரசிறியின் பணிப்புரையின் கீழ் காத்தான்குடி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி துமிந்த நயணசிறியின் வழிகாட்டலில் பொலிஸ் நிலைய விசேட குற்றத்தடுப்பு பொறுப்பதிகாரி கயான் ராஜகருண தலைமையிலான பொலிஸ் குழுவினர் இவர்களைக் கைது செய்தனர்.

இவர்களிடமிருந்து கொள்ளைக்குப் பயன்பத்திய கார் மற்றும் மோட்டார் சைக்கிள் என்பனவும் கைப்பற்றப்பட்டுள்ளன.

சந்தேக நபர்கள் மட்டக்களப்பு நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்படவுள்ளதுடன் காத்தான்குடி பொலிசார் மேலதிக விசாரணைகளையும் மேற்கொண்டுள்ளனர்.

## உணர்வு...

(முன்பக்க தொடர்ச்சி)

என்னுடைய வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கின்றேன். உண்மையிலேயே இன்றைய தினம் எங்களுடைய மக்கள் வழங்கிய பூரண

ஒத்துழைப்பினை பார்க்கின்ற போது, மிகவும் மகிழ்ச்சியாக இருக்கின்றது.

வடக்கு, கிழக்கு முழுவதும், பூரண கடையடைப்பினை மேற்கொண்டு ஹர்த்தாலுக்கு ஒத்துழைப்பு வழங்கிய எங்களுடைய மக்களுக்கு நன்றி.

உண்மையிலேயே இந்த நிகழ்வுகளுக்கான ஆரம்பம் இரண்டு வாரங்களுக்கு முன்னர் தியாகி திலிபனினுடைய நினைவேந்தல் தினத்தினை தடை செய்து, நான் உட்பட எங்களுடைய வடக்கு, கிழக்கினைச் சேர்ந்த அரசியல் பிரமுகர்களுக்கு

வழங்கப்பட்ட தடையுத்தரவிலிருந்து ஆரம்பித்த இந்த விடயம் இரண்டு

வாரங்களுக்கு அடுத்து நாங்கள் இந்த நாட்டில் ஜனநாயகம் இல்லாமல் அதாவது,

இந்த நாட்டில் உயிரிழந்த ஒருவரை நினைவு கூர்வதற்கு, நாட்டு மக்களுக்கு

சுதந்திரம் இல்லை, ஜனநாயகம் இல்லை என்ற வகையில் இந்த நாட்டுக்காக ஜனநாயகம்

பிரார்த்தித்து நாங்கள் சில ஆலயங்களில் செய்த மதவழிபாடுகளுக்கும்

நீதிமன்றம் ஊடாக வழங்கப்பட்ட தடையுத்தரவினை அடுத்து, இன்றைய தினம் இந்த

அனைத்திற்கும் எதிர்ப்பு தெரிவித்து,

இந்த ஹர்த்தாலிற்கு வடக்கு, கிழக்கு மக்கள் அனைவரும் பூரண ஒத்துழைப்புகளை

வழங்கி வெற்றிகரமாக நடைபெற்று முடிந்துள்ளமையினை பார்க்கும் போது

சந்தோசமாகவுள்ளது என தெரிவித்தார்.

# மட்டு.தாளங்குடாவில் கைக்குண்டு மீட்பு

(றீ.எல்.ஜவ்பர்கான்)

மட்டக்களப்பு காத்தான்குடி பொலிஸ் பிரிவிற்குட்பட்ட தாளங்குடாவில் சத்தி வாய்ந்த கைக்குண்டொன்று மீட்கப்பட்டுள்ளதாக காத்தான்குடி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி துமிந்த நயணசிறி தெரிவித்தார்.

நேற்றுக்கலை 11 மணியளவில் தாளங்குடா இந்து மையானத்திலிருந்து குறித்த கைக்குண்டு மீட்கப்பட்டதாக அவர் மேலும் தெரிவித்தார்.

கிடைக்கப்பெற்ற தகவலொன்றையடுத்து காத்தான்குடி பொலிஸ் நிலைய விசேட குற்றத்தடுப்பு பொறுப்பதிகாரி கயான் ராஜகருண தலைமையிலான பொலிஸ் குழுவினர் இக்கைக்குண்டைக் கைப்பற்றியதுடன் குண்டு செயலிழக்கும் படையினரால் செயலிழக்கச் செய்யப்பட்டது.

காத்தான்குடி பொலிசார்



## 20 ஆவது...

(முன்பக்க தொடர்ச்சி)

பரிந்துரைக்கப்பட்டுள்ளனர்.


10 உறுப்பினர் குழுவுக்கு அமைச்சர் நிமல் சிரிபாலா டி சில்வா தலைமை தாங்குகிறார்.

இந்த குழுவின் மற்ற உறுப்பினர்கள், பேராசிரியர் ரோஹனா லக்ஷ்மன் பியதாச, அமைச்சர் மஹிந்த அமரவீர, இராஜங்க அமைச்சர் தயாசிரி ஜெயசேகர, இராஜங்கஅமைச்சர் துமிந்தா திசானநாயக்க, நாடாளுமன்ற உறுப்பினர் ஷான் விஜயலால் டி சில்வா, முன்னாள் அமைச்சர் பைசர் முஸ்தபா எம். பி, சரதி துஷ்மந்தா, வழக்கறிஞர் சஞ்சய கமகே டாக்டர் சாமிலா லியானகே

இந்த குழுவின் பரிந்துரைகளை பரிசீலித்த பின்னர், கட்சியின் கருத்துகள் மற்றும் திட்டங்கள் எதிர்காலத்தில் பிரதமர் மகிந்த ராஜபக்ஷ அவர்களால் நியமிக்கப்பட்ட குழுவிடம் ஒப்படைக்கப்படும்.

# முடங்கியது வட - கிழக்கு பிரதேசம்



ஹர்த்தால் படங்கள்...






# "20" தொடர்பில் உயர் நீதிமன்றத்தின் சட்டவியாக்கியானம் வெளிவந்த பின்னர் எமது முடிவை அறிவிப்போம்

## இராதாகிருஷ்ணன் எம்.பி. தெரிவிப்பு



(க.கிஷாந்தன்)

அரசியலமைப்பின் 20ஆவது திருத்தச்சட்ட மூலத்தில் பல குறைப்பாடுகள் உள்ளன. சட்டமூலத்தை சவாலுக்குட்படுத்தி உயர்நீதிமன்றத்தில் மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. எனவே "20" தொடர்பில் உயர்நீதிமன்றத்தின் சட்டவியாக்கியானம் வெளிவந்த பின்னர் எமது முடிவை அறிவிப்போம். - என்று மலையக மக்கள் முன்னணியின் தலைவரும், தமிழ் முற்போக்கு கூட்டணியின் பிரதித் தலைவருமான கலாநிதி இராதாகிருஷ்ணன் எம்.பி. தெரிவித்தார்.

நுவரெலியாவில் 28.09.2020 அன்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

வடக்கு, கிழக்கு ஹர்த்தால், 13 ஆவது திருத்தச்சட்டம் மற்றும் 20 ஆவது திருத்தச்சட்டமூலம் ஆகியன தொடர்பில் அவர் கூறியதாவது,

வடக்கு, கிழக்கில் ஜனநாயக ரீதியில் நடைபெறும் பூரண ஹர்த்தாலுக்கு நாமும் ஆதரவு தெரிவிக்கின்றோம். ஜனநாயக ரீதியில் முன்னெடுக்கப்படும் நடவடிக்கைகளுக்கு நாம் எதிர்ப்பை வெளியிடமாட்டோம்.

இந்திய பிரதமர் நரேந்திர மோடி மற்றும் இலங்கை பிரதமர் மஹிந்த ராஜபக்ச ஆகியோருக்கிடையிலான காணொளி மூல கலந்துரையாடல் கடந்த 26 ஆம் திகதி நடைபெற்றது. இதன்போது தமிழ் மக்களின் அபிலாஷைகளை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் என பாரத பிரதமர் வலியுறுத்தியுள்ளார். தேசிய இனப்பிரச்சினைக்கான தீர்வு திட்டமாக முன்வைக்கப்பட்ட 13ஆவது திருத்தச்சட்டம் முழுமையாக அமுல்படுத்தப்படவேண்டும் எனவும் வலியுறுத்தியுள்ளார். எனவே, இதனை செய்வதற்கு இலங்கை அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவேண்டும். மோடியின் அறிவிப்பை நாமும் வரவேற்கின்றோம்.

13 விடயத்தில் மோடி அறிவுறுத்தல் வழங்கலாம், ஆனால் அழுத்தம் கொடுக்கமுடியாது என இராஜாங்க அமைச்சர் சரத்வீரசேகர குறிப்பிட்டுள்ளார். அப்படியானால் 13 பற்றி பேசப்பட்டுள்ளது. எனவே, சில அமைச்சர்கள் இல்லை என கூறுவதை ஏற்கமுடியாது.

அதேவேளை, அரசியலமைப்பின் 20ஆவது திருத்தச்சட்டமூலம் தொடர்பில் நாம் இன்னும் எமது முழுமையான அறிவித்தலை வழங்கவில்லை. எதுஎப்படியிருந்தாலும் 20 ஆவது திருத்தச்சட்டமூலம் நாட்டுக்கு பொருத்தமானதா என்பதை ஆராயவேண்டும். 19 ஊடாக நாட்டில் ஜனநாயகம் நிலைநிறுத்தப்பட்டது.அதனை நாம் ஆதரித்திருந்தோம். ஜனாதிபதி மற்றும் பிரதமருக்கிடையில் இருந்த மோதலால் சிக்கல்கள் உருவானதே தவிர 19 ஆவது திருத்தச்சட்டத்தை குறைகூற முடியாது.

கணக்காய்வு ஆணைக்குழு ஒழிப்பு, பாராளுமன்றத்தை ஓராண்டுக்கு பின் கலைத்தல் உட்பட 20 இல் ஏற்றுக்கொள்ளமுடியாத சில விடயங்கள் உள்ளன. "20" இற்கு எதிராக உயர்நீதிமன்றத்தில் மனுக்கள் தாக்கல்செய்யப்பட்டுள்ளன. ஐக்கிய மக்கள் சக்தியும் தாக்கல் செய்துள்ளதால் நாம் தனியாக மனுதாக்கல் செய்யவில்லை.

எனவே, உயர்நீதிமன்றத்தின் சட்டவிளக்கம் வெளிவந்த பின்னர், 20 இல் எவ்வாறான திருத்தங்கள் இடம்பெறவுள்ளன என்பது உட்பட சில விடயங்களை கருத்திற்கொண்டு எமது முடிவு அறிவிக்கப்படும். - என்றார்.

# மன்னார் பிரஜைகள் குழு ஆளுநர் சபை தெரிவு





(தலைமன்னார் வாஸ் கூஞ்ஞ)

மன்னார் மாவட்ட பிரஜைகள் குழுவின் பதினொராவது ஆளுநர் சபைக்கான தெரிவு மன்னார் மறைமாவட்ட ஆயர் மேதகு இம்மானுவேல் பெனாண்டோ ஆண்டகை தலைமையில் சனிக்கிழமை (26.09.2020) மன்னார் கலையருவி மண்டபத்தில் இடம்பெற்றது.

இவ் தெரிவானது தேர்தல் முறைப்படி வாக்களிப்பு மூலம் இடம்பெற்றது. இவ் தேர்தலின்போது மன்னார் தேர்தல் உதவி ஆனையாளர் ஜே.ஜெனிற்றன், மன்னார் பிரதேச செயலாளர் எம். பிரதீப், மன்னார் மாவட்ட சமூக சீர்திருத்த திணைக்கள அதிகாரி எம்.என்.நஜீம் ஆகியோர் இவ் தேர்தலில் கடமையில் ஈடுபட்டனர்.

இவ் மன்னார் மாவட்ட பிரஜைகள் குழுவின் போஷகராக மன்னார் மறைமாவட்ட ஆயர் மேதகு இம்மானுவேல் பெனாண்டோ ஆண்டகையும்

தலைவராக அருட்பணி ஏ.ஞானப்பிரகாசம் அடிகளார், உப தலைவராக எம்.எம். சபூர்தீன் (சிரேஷ்ட சட்டத்தரணி) செயலாளராக ஏ.பத்திநாதன் குஷரூஸ் (ஓய்வு நிலை கல்வி அதிகாரி), உப செயலாளராக எம்.சீ.முகம்மது றம்சீன், பொருளாளராக ஏ.அன்ரன் றேமஸ் குஷரூஸ் (இலங்கை தேசிய நிர்மாணிகள் சங்க வட மாகாண கிளை தலைவர்), ஆகியோர் தெரிவு செய்யப்பட்டுள்ளதுடன் ஆளுநர் நிர்வாக சபை உறுப்பினர்களாக அருட்பணி எஸ். மாக்கஸ் அடிகளார், எல். லூக்காஸ் தர்மதாஸ் (ஓய்வுநிலை அதிபர்), எஸ்.செசாரியஸ் பெர்னாண்டோ (ஓய்வு நிலை வங்கி முகாமையாளர்), எல். ஜி.வாஸ் கூஞ்ஞ (சிரேஷ்ட ஊடகவியலாளர்), சீ.தயாளன் (மனித உரிமை அபிவிருத்தி நிலையத்துக்கான மன்னார் இணைப்பாளர்), எஸ். ஜேம்ஸ் பிரான்சீஸ் யேசுதாசன் (முன்னாள் மன்னார் நகர சபை உப முதல்வர்), ஏ.வில்பிரட் அர்ஜுன் (சிரேஷ்ட சட்டத்தரணி), எஸ்.எஸ்.இராமகிருஷ்ணன் (ஓய்வு நிலை எந்திரி) ஆகியோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

# அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலை நலன்புரிச்சங்க விளையாட்டு திருவிழா






(றிஸ்வான் சாலிஹூ)

வருடந்தோறும் அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலை நலன்புரிச் சங்கத்தினால் நடாத்தப்படும் விளையாட்டுத் திருவிழா இம்முறையும் மிகச்சிறப்பாக நலன்புரிச்சங்கத் தலைவர் டாக்டர் ஏ.சீ. அப்துல் ரஷாக் தலைமையில் நேற்று (27) ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது.

இந்நிகழ்வின் முதற்கட்டமாக ஆண்கள் பிரிவில் கிரிக்கெற் சுற்றுப்போட்டி அக்கரைப்பற்று அஷ்-ஷுஹறா வித்தியாலய மைதானத்தில் இடம்பெற்றது. இதில் நலன்புரிச்சங்க வின்ஸ்டார் அணியினர் வெற்றிக்கிண்ணத்தைச் சுவீகரித்ததோடு டொனீடோ அணியினர் இரண்டாம் நிலையை பெற்றுக்கொண்டனர்.

இப்போட்டி நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு பல்வேறு வழிகளிலும் உதவி வழங்கிய அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலையின் பொது வைத்திய நிபுணர் டாக்டர். அஹமட் பரீட், தரமுகாமைத்தவ பகுதி பொறுப்பு வைத்தியர் டாக்டர். மப்ஷூஹா, நலன் புரிச்சங்க உப தலைவர் டாக்டர். சனூபர், டாக்டர். ஹசன் பஸ்ரி, டாக்டர். அகீலா மற்றும் டாக்டர். றபீசா ஆகியோர்களுக்கு நலன்புரி சங்கம் நன்றிகளை தெரிவித்துக் கொள்வதோடு, இதற்கு மேலதிகமாக பல்வேறு வகைகளிலும் உதவி ஒத்தாசை புரிந்த வைத்திய அத்தியட்சகர் டாக்டர். ஐ.எம். ஜவாஹிர் அவர்களுக்கும் மற்றும் வைத்தியசாலை அனைத்து ஊழியர்களுக்கும் நன்றிகளை மேலும் அவர்கள் தெரிவித்துள்ளார்கள்.

# போதைப்பொருள் பாவனை மற்றும் விற்பனையை முற்றாக ஒழிக்க பாரிய செயற்திட்டம் முன்னெடுப்பு

(பைஷல் இஸ்மாயில்)

"நாட்டினதும், ஊரினதும் எதிர் காலத்தை கருத்திற் கொண்டு போதைப்பொருள் பாவனை மற்றும் விற்பனையை முற்றாக ஒழிக்க பாரிய அளவிலான ஓர் பொதுப் பணிக்காக நாம் அனைவரும் ஒன்றுபடுவோம்" என்ற கருப்பொருளில் அக்கரைப்பற்று அனைத்து பள்ளிவாசல்கள் சம்மேளனத்தின் வழிநடத்தலில், "APEC International" அமைப்பின் பங்களிப்புடன் ஏற்பாடு செய்யப்பட்ட போதை ஒழிப்பு தொடர்பான விழிப்புணர்வு நிகழ்வு (27) அக்கரைப்பற்று பெரிய பள்ளிவாசல் கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

சம்மேளனத்தின் பொதுச் செயலாளர் ஓய்வு பெற்ற அதிபர் எம்.பீ.ஏ. அப்துல் ஹமீட் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் எபேக் அமைப்பின் தலைவரும், இலங்கை தென்கிழக்கு பல்கலைக்கழகத்தின் பொறியியல் பீட தலைவருமான பேராசிரியர் முஸாதீக், அக்கரைப்பற்று பிரதேச செயலாளர் அஷ்ஷேக் எம்.எஸ்.எம்.றஸான், அக்கரைப்பற்று ஜம்மியத்துல் உலமா சபையின் இணைச் செயலாளர் அஷ்ஷேக். எஸ். அப்துல் ஹாதி (நழிமி), நீத்தை இராணுவ கட்டளைத் தளபதி மேஜர் சமிந்த புஸ்பசிறி, அக்கரைப்பற்று பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி டப்ளியு.எம்.எஸ்.ரீ.விஜயதுங்க ஆகியோர் கலந்துகொண்டு நாட்டினதும், ஊரினதும் எதிர்காலத்தை கருத்திற் கொண்டு போதைப்பொருள் பாவனை மற்றும் விற்பனையை முற்றாக ஒழிக்க பாரிய பங்களிப்பினை வழங்க வேண்டுமென்று அக்கரைப்பற்றைச் சேர்ந்த அரச நிறுவனங்களின் தலைவர்கள், சட்டத்தரணிகள், உலமாக்கள், புத்திஜீவிகள், சமூக ஆர்வலர்கள், அரச உத்தியோகத்தர்கள் ஆகியோர்களிடம் கேட்டுக் கொண்டனர்.

இந்த செயற்பாட்டை நடைமுறைப்படுத்துவதற்கு அக்கரைப்பற்றில் உள்ள சகல அரச மற்றும் தனியார் நிறுவனங்களின் தலைவர்கள் பூரணமான ஆதரவினை தருவதாக உறுதிமொழி வழங்கியமை குறிப்பிடத்தக்கது.

# சுப்பர் ஹீரோஸ் சவால் கிண்ணம்-2020

## வெற்றி வாகை சூடியது பவர் பிளேயர்ஸ் "96







(எஸ்.அஷ்ரப்கான், யு.கே.காலிதீன்)

சுப்பர் ஹீரோஸ் சவால் கிண்ணம்-2020 சம்பியனாக பவர் பிளேயர்ஸ் 96 அணியினர் வெற்றி வாகை சூடினர்.

சுப்பர் ஹுரோஸ் 97 அணியினரின் ஏற்பாட்டில் விளையாட்டு உத்தியோகஸ்தர் ஏ.முஹம்மட் றஸ்ஊனின் வழி நடாத்தலில் சுப்பர் ஹீரோஸ் சவால் கிண்ணம்-2020 சுற்றுப்போட்டி அணிக்கு 11 பேர் கொண்ட 10 ஓவர்கள் மட்டுப்படுத்தப்பட்ட மென்பந்து கிரிக்கட் சுற்றுப் போட்டியாக தாய்ப் பாடசாலையான கல்முனை ஸாஹிறா தேசிய பாடசாலை மைதானத்தில் சனி, ஞாயிறு (26,27) தினங்களில் நடைபெற்றது.

இச்சுற்றுப் போட்டியில் பவர் பிளேயர்ஸ் 96, சுப்பர் ஹுரோஸ் 97, ஸஹ்றியன் 90, ஸஹ்றியன் 95 ஆகிய அணிகள் மோதின.

இதில் இறுதிப்போட்டிக்கு பவர் பிளேயர்ஸ் 96 மற்றும் ஸஹ்றியன் 95 அணிகள் தெரிவாகின.

இதன் அடிப்படையில் நேற்று (27) ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற இறுதிப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற ஸஹ்றியன் 95 அணி பவர் பிளேயர்ஸ் 96 அணியினரை துடுப்பெடுத்தாட பணித்ததற்கிணங்க முதலில் துடுப்பெடுத்தாடிய பவர் பிளேயர்ஸ் 96 அணியினர் 10 ஓவர்கள் முடிவில் 7 விக்கெட்டுக்களை மட்டும் இழந்து 109 ஓட்டங்களை பெற்றுக் கொண்டனர்.இவ்வணியில் அதிகூடிய ஓட்டமாக றிபாய் காரியப்பர் 10 பந்துகளுக்கு 25 ஓட்டங்களையும், நஜாத் 13 பந்துகளுக்கு 23 ஓட்டங்களையும் பெற்றனர்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய ஸஹ்றியன் 95 அணியினர் 9.5 பந்துவீச்சு ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 53 ஓட்டங்களை மட்டுமே பெற்று தோல்வி கண்டனர்.

இதனடிப்படையில் 55 ஓட்டங்களால் பவர் பிளேயர்ஸ் 96 வெற்றி பெற்று சம்பியனாக தெரிவாகினர்.

இச்சுற்றுப் போட்டித் தொடர் ஆட்ட நாயகனாக (மேன் ஒப் த சீரிஸ்) பவர் பிளேயர்ஸ் 96 அணியின் றிபாய் மற்றும் இறுதிப் போட்டி ஆட்ட நாயகனாக றிபாய் காரியப்பர் ஆகியோர் தெரிவானார்கள்.

இவ்விறுதிப் போட்டி நிகழ்வில் பாடசாலை அதிபர் எம்.ஜாபீர் பிரதம அதிதியாகவும், ஓய்வு பெற்ற விளையாட்டு அதிகாரி முஹம்மட் நபார் மற்றும் பொறியியலாளர் ஜெசீல் ஆகியோர் கௌரவ அதிதிகளாகவும் கலந்து சிறப்பித்துடன் வெற்றிக்கிண்ணங்களையும் வழங்கி வைத்தனர்.